
உ

சிவமயம்



பள்ளம்புலம் வேலணையை பிறப்பிடமாகவும்

வட்டக்கச்சி கிளிநொச்சியை வாழ்விடமாகவும் கொண்ட

# அமரர். திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லப்பா



அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

26.05.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பள்ளம்புலம், வேலணைக் கிராமத்தைப்
பிறப்பிடமாகவும், வட்டக் கச்சி கிளிநொச்சியை வாழ்விடமாகவும் ஏற்று
வாழ்வாங்கு வாழ்ந்து இறைவன் திருவடி நோக்கிய

## அமரர்.
## திருமதி தெய்வானைப்பிள்ளை செல்லப்பா
## அவர்களின்
## அமரத்துவம் குறித்த

# நினைவுமலர்
# வெளியீடு

26.05.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

விழுதுகள் ஆள் ஆன போது
விழுந்து விட்ட ஆலமரம்
எங்கள் குடும்பத் தலைவி
எம்மை இவ் உலகீன்று


அன்பு பண்பு பாசம் எனும்
மூன்றையும் அமுதமாய்
ஊட்டி வளர்த்த
அன்புத் தெய்வம்
இன்று எம்மோடு இல்லை
ஆதவனும் ஆகாயமும்
கடலும் சந்திரனும்
என்றும் நிலைத்திருப்பது போல்
நின் புகழும் நிலைத்திருக்க
உம் கருவுதித்த காணிக்கையாய்
இம்மலரை
தங்கள் திருவடிக் கமலங்களுக்கு
கண்ணீர்ப் பூக்களாய்
காணிக்கை செய்கின்றோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணின் மகவாய் விண்ணின் மகளாய் :

01.07.1927 26.04.2013

அமரர்.

# திருமதி. தெய்வானைப்பிள்ளை செல்லப்பா

## திதி வெண்பா

ஆண்டு பதின்மூன்று ஆனசித்தி ரைதன்னார்
பூண்டிரு பத்தாறாம் பொன்னாளில் – காண்அபர
பட்சப் பிரதமைதான் தெய்வானைப் பிள்ளையவள்
தொட்டிறைவ மரண திதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

நெஞ்சம் உமக்கே இடம் ஆக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்து அறியேன்
வஞ்சம்இது ஒப்பது கண்டு அறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட,
நஞ்சு ஆகி வந்து என்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்
'அஞ்சேலும் !' என்னீர் - அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே!

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரை
ஆர் கழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி இறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா எங்கள்
காலகாலா காம நாசா
ஆலமே அமுதுண் டம்பலம் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே.

## திருப்பல்லாண்டு

நிட்டையி லாஉடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களு மேசிந்தித்
தட்டமூர்த் திக்கென் அகம்நெக ஊறும்
அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கருப்பத் தூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப் பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாவித் தருள்வாயே
பரப் பற்றாருக் குரியோனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காண்இது எப்படியோ
அறமார் புகழ்தில்லை அம்பல வாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே! அதுகாண் நல் மருந்துனக்கே!

## இராமலிங்க சுவாமி பாடல்

நான்படும் பாடு சிவனே
உலகர் நாவிலும்பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு
மோஎண்ணத் தான்படுமோ
கான்படு கண்ணியின் மான்படு
மாறு கலங்கிநின்றேன்
ஏன்படு கின்றனை என்றிரங்
காய்என்னில் என்செய்வனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பள்ளம்புலம், வேலணைக் கிராமத்தைப்பிறப்பிடமாக் கொண்டும், வட்டக்கச்சி கிளிநொச்சியை வாழ்விடமாகக் கொண்டும் அமரத்துவம் அடைந்த அமரத்துவமாது தெய்வானைப்பிள்ளை செல்லப்பா அவர்களின் வாழ்க்கை வரலாறு**

மரகதம் மாணிக்கம் வைரங்கள் பொதிந்த
திரைகட லோதத் திரவியம் கொழிக்கும்
தெங்கும் பனையும் தீங்கனி யலம்பும்
பொங்கு வார்நிலப் பூமியென் றுலகம்
செப்பக் கிடைத்த செழிவள நாடாய்
ஈழம், இலங்கை, இரத்தின துவீபம்,
ஆழக் கடல்சேர் அலைக்கும் முத்தும்
ஒப்பக் கிடைத்த இலங்கையாம், வடபால்
வளர்தமிழ் ஓங்க வைகறைக் கதிரோன்
விளைநிலம் பார்த்து வியக்கும் யாழ்நிலக்
குடமெனும் அடர்பயிர் கொழிக்கும் செம்மண்
படரும் பயிர்வளப் பழுப்பு மண்ணொடும்
வாழை மாபலா வளர்கனி செந்நெல்
தாழை கமுகு தங்கப் புகையிலை
ஆகம் மரக்கறி அனைத்தும் விளையும்
யாழைப் பரிசாய் நயந்தவன் பூமிச்
சரிதம் சொல்லும் சரித்திர யாழ்நகர்
உரிதம் ஆகும் ஏழ்தீ வதனில்
வேலணை என்க விளங்கும் மாமணித்
தூலமார் சைவம், செழிப்புற வோங்கும்
கோவிலும் கல்விக் கூடமும் கொழிக்கும்
பாவலர் சூழ்ந்த பழம்பெரும் திருவூர்
என்றே சிறக்கும் இலங்கும் நல்நகர்
தொன்று தொட்டே துலங்கும் வேலணை
நலம்தரும் வடக்கில் நாற்திசை யலைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமெனச் செறிந்த நிலமாம் பள்ளம்
புலமொரு பண்பும் பொதிந்த நிலத்தில்
வழுக்கைப் புலத்தின் வைரவர் வலமாய்
இழுக்கும் அருகிலே யிருந்து அவரருள்
கிடைக்கக் கனிந்த கேண்மையில் வாழ்ந்தும்
படையார் ஐயனார் பார்க்கக் கிழக்காய்
ஆலடி பார்க்கவும், அழகவன் முருகன்
காலடி தெற்கில் கனியவும் சூழ்ந்த
பேரிறைப் பள்ளம் புலத்திலே தோன்றி
வாரிறை யாக்கிய வாழ்வதின் படியால்,
தந்தையார் சுப்பிரமணியம் கூடிய
தங்கமுத்துத் தம்பதி யாருடன்
பிறந்த பிள்ளைகள் பசுபதிப்பிள்ளை,
சிறந்த இராசம்மா, செல்லம்மா வாருடன்
முத்தாச்சி தெய்வானைப்பிள்ளை முகிழ்க்க
முத்தென வந்த பசுபதிப்பிள்ளை
மொய்குழல் மனோன்மணி பெற்று வாழ்ந்திட
இராசம்மா மணியாள் இணைய நாகநாதி
இராகமாய் வாழ்விட, இன்னொரு அக்கா
செல்லம்மா கூடிச் சொர்ணலிங்கம்
இல்லம் அமைத்திட இளையவள் தெய்வானை
பூநகரி என்கும் பூத்த அடையாள
மாநகர் வியாபார வர்த்தகர் நாகநாதி
செல்லப்பா தனைக் சேர்ந்த வாழ்வதில்
இல்லம் அமைத்து இயல்பாய் நடக்கையில்
பிள்ளைகள் மூவர் பிறந்தனர் மூவரும்
துள்ளும்ஆண் பிள்ளைகள் ஆக இருக்கையில்
மூத்தவர் விக்கினேஸ்வரலிங்கம், லிங்கம்என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏத்தியே அழைக்க, இரண்டாவ தாயுதித்த
புவனேஸ்வரன் இராசா எனவழைக்க மூன்றாம்
தவப்பிள்ளை பரமேஸ்வரன் ஈசன் எனக்கூற
மூவரும் சிறந்த முத்தான பிள்ளைகளாய்
ஆவலாய்ப் பெற்றோர் அகங்குளிர இருக்கையில்
செல்லப்பாத் தந்தையார் சேரிறைவன் தாளிணையில்
செல்லவே, தெய்வானை சேர்ந்தே மைந்தருடன்
சிறக்க வாழ்கையில் சிறப்புக் கண்டாரே!
இலிங்கம் எனும் மூத்தவர் இல்லாளாய்ச்
சிவானந்த வல்லியெனும் சேரிழையாள் சேரவே
சுதாகரன், குகதீபன் என்னும் மகனார்
இருவரைப் பெற்று இருக்கையில் சுதாகரன்
பெருந்தெய்வ அழைப்பில் பிரிந்தான் அறிவீர்!
குகதீபன் என்னும் குணமைந்தன் மற்றவன்
செகமாக அவுஸ்திரே லியாசென்று வாழவே,
புவனேஸ்வரன் இராசா பாலசரஸ்வதி யாளை
சிவனுமை போற்பெற சுவிஸ்சென்று வாழுகையில்
பிள்ளைகள் மூவர் பிறக்க மூத்தவள்
கொள்ளைப் பேரழகுக் குழந்தை பமீனா,
ஜசின்,றஜின் என்க இருஆண் குழந்தைகள்
வசமாகி நின்று வாழ்வாங்கு வாழுகையில்
ஈசனெனும் பரமேஸ்வரன் ஏந்திளை சுதாமதி
வாசமாய்ப் பெற்று வாழுகையில் அஸ்விகா
என்னும் அழகுமகள் இல்லத்தே அலங்கரிக்க
மின்னும் அவுஸ்திரேலியா மேவியே வாழுகையில்
எழுபத் தைந்தகவை எட்டித் தெய்வானை
வழுதி வாழ்ந்த வண்ணமிகு நாட்களதில்
வட்டக்கச்சி வளநகர் மாநகர் கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டப்பெற்று மூத்தமகன் இலிங்கன் உடன்வாழ்ந்து
முத்தாச்சி அக்காவென முன்மொழியத் தெய்வானை
அத்தாவின் பாதம் அடையப் பெற்றாள்!
இரண்டா யிரத்துப் பதின்மூன்றா மாண்டு
இருபத்தி யாறு வெள்ளிக் கிழமை
அபரபட்சப் பிரதமை ஆன திதியில்
சுபமாக விண்ணாகிச் சென்றார் எனும்போது
நற்பேறு நல்லிறைவன் தாள்சென்றார் என்றே
எப்போதும் நாமுரைப்போம் நன்றாம் வாழ்வே!

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் அதை நழுவி விடாதீர்கள்
வாழ்க்கை ஒரு பயணம் அதைச் சென்று முடியுங்கள்
வாழ்க்கை ஒரு விடுகதை அதை விடுவியுங்கள்
வாழ்க்கை ஒரு போட்டி அதில் வெற்றி பெறுங்கள்
வாழ்க்கை ஒரு கலை அதை அழகு படுத்துங்கள்
வாழ்க்கை ஒரு சவால் அதை எதிர் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் அதனை கடந்து வாருங்கள்
வாழ்க்கை ஒரு கடமை அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு அதனை விளையாடுங்கள்
வாழ்க்கை ஒரு வினோதம் அதனை கண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு பாடல் அதனை பாடுங்கள்
வாழ்க்கை ஒரு பயணம் அதனை முடித்துவிடுங்கள்
வாழ்க்கை ஒரு உறுதிமொழி அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு காதல் அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம் அதனை விடை காணுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு அதனை எட்டிப்பிடியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான அம்மா !

அமைதியாய் அழகுப் பேச்சு
அன்பதாய் அழைக்கும் மூச்சு
சுமையெனக் கருதா மற்தான்
செல்லமாய் வளர்த்துப் பேணி
இமைபோலக் காத்துக் கூட
இருத்தியே ஆசி யோடும்
உமையாளாய் வளர்த்த தாயே
இன்றுநீ சென்ற தெங்கே?

இலிங்கமே ராசா ஈசன்
என்றிட அழைத்த அம்மா
கலிங்கமாய் அரசு ஆக்கி
கருணையாய் வளர்த்த தாயே
எலியதாற் குறுகித் துன்ப
இடுக்கினில் வாழு கின்றோம்!
வலியது பொறுக்க வில்லை
வளர்த்தநீ எங்கே சென்றாய்?

உங்கள் பிரிவால் வாடும் மைந்தர்கள்
லிங்கம், ராசா, ஈசன்

**நினைவில் நிற்க.**

- அருள் நிறைந்த உள்ளம் ஆண்டவன் வாழும் இல்லம்.
- உண்மை பேசும் மனத்தான் என்றும் உயர்ந்தவனாக இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் தாயே !

மாமியாய் இருந்த தில்லை
மாண்பிடும் தாயாய் நின்றீர்!
சேமமாய் அழைப்பீர் அன்புச்
சித்திரம் ஆக நின்றீர்!
நாமமாய் முத்து ஆச்சி
நல்லவ ரெல்லாம் வாழ்த்தும்
மாமகள் ஆக நின்றீர்
மக்களாய் எம்மைக் கண்டீர்!

பேரர்கள் மடியிற் துஞ்சப்
பிடித்துமே அதரம் கொஞ்ச
ஊரர்கள் மகிழக் கண்ட
உத்தமி தானு மென்கச்
சாரமாய் நின்ற மாமி
சாவனம் கொண்டு போச்சே!
ஈரமாய்ப் பனிக்கும் கண்ணில்
என்றென்றும் வாழ்வாய் மாமி!

மருமக்கள்
சிவாநந்தவல்லி
பாலசரஸ்வதி
சுதாமதி

- உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன
- கல்வி கற்றவரை எளிதில் திருத்தலாம். ஆனால் ஏமாற்ற முடியாது. எளிதில் ஆளலாம்
- சினங் கொண்டு செயலில் ஈடுபடாதே. சினம் அறிவையும் செயலையும் பாழாக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரர்கள் உருக்கம் !

ஆசைப் பாட்டி படத்தைத் தொட்டு
வேளையெல்லாம் மகிழ்வோமே!
பாசப் பாட்டி என்று சொல்லி
பாடிப் பாடி மகிழ்வோமே!

சீலம் வாய்ந்த எங்கள் பாட்டி
சிரித்துச் சிரித்து வாழ்ந்துமே
காலம்விட்ட கட்டளைக்குக்
காணாதின்று போனீரே!

அன்புப் பாட்டி உம்மை எண்ணி
அழுது அழுது கிடக்கின்றோம்!
என்று வருவாய் என்றே எண்ணி
இருக்கும் இடத்தைப் பார்க்கின்றோம்!

பாட்டி வாராய் ஒருநாள் இந்தப்
பாரில் மீண்டும் வாழ்வோமே!
ஊட்டி ஊட்டி வளர்த்த கையில்
உறங்க மீண்டும் வருவாயே!

பேரபிள்ளைகள்
குகா, பமீனா,
ஐசின், றஜிவ்

- பிறர் யோசனையை தாராளமாகக் கேட்டுக் கொள் ஆனால் சுய புத்தியைக் கொண்டு செயலாற்று!
- சினங் கொண்டு செயலில் ஈடுபடாதே. சினம் அறிவையும் செயலையும் பாழாக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் பதிந்த உறவு குஞ்சியம்மா !

உள்ளத்தில் வஞ்சமில்லை உம் அன்பினில் பஞ்சமில்லை. இறைபக்தியிலும் கஞ்சமில்லை வயிரவர் தொண்டினிலும் மீதமில்லை. பெறாமக்கள் என எண்ணாது நீங்கள் பெற்ற பிள்ளைகளாய் பாசம் காட்டுவதிலும் பஞ்சமில்லை.

அம்மாவை இழந்த சோகம் எம்மை ஆழ்ந்த போதும் திக்கொன்று திசைக்கொன்றாய் திசைமாறிச்சென்ற போதும் உம் அன்பால் ஆறுதல் செய்து பாசம் துடிக்க நித்தமும் பேசுவீரே.

நாம் மட்டும் பாசத்துடன் குஞ்சியம்மா என்று அழைக்கவில்லை ஊரே பெருமையுடன் முத்தாச்சி குஞ்சியம்மா என்று அழைக்க ஊரோடு ஒன்றி வாழ்ந்தீரே இன்று ஊர் போற்ற வாழ்ந்த உங்களுக்காய் அழும் கண்கள் கொஞ்சமில்லை.

இந்திரா என அழைக்கும் உமது ஒலியில் மெய்மறந்து நிற்பேனே. உங்கள் மந்திரப் புன்னகையில் மனம் மகிழ்ந்து கொள்வேனே. அம்மா என்ற இலக்கணத்துக்கு உற்ற உறவாய் இருந்தீரே காலன் செய்த கோலத்தால் எமை விட்டுப் போனீரே.

உம் நெஞ்சத்து நினைவுகளால் எம் கண்கள் துஞ்ச மறுக்குதம்மா இவ்வுலகில் மிஞ்சாது ஒன்றும் என்று நீரும் பரமபதம் போனீரோ!

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பெறாமகள்

கணேசமூர்த்தி புவனேஸ்வரி

(இந்திரா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே குஞ்சியம்மா !

என் தாயின் தங்கை நீ. எனக்கு நீ சிறிய தாய். ஆனால் நாம் உம்மை அழைப்போம் அன்பாய் குஞ்சியம்மா என்று. ஆனால் நீ எல்லோருக்கும் குஞ்சியம்மாவானாய். சிறியோரிலிருந்து பெரியோர் வரை உன்னை குஞ்சியம்மா என்றுதான் அழைப்பார்கள். ஆனாலும் நீ கடைவாய்ச் சிரிப்பெடுத்து இனிவான பார்வைகாட்டி எம்முன்னே வந்திடுவாய் அம்மா. குஞ்சியம்மா என் தாயின் உடன்பிறப்பில் நீ மட்டும் தனித்திருந்தாய். அதுகூட பொறுக்கவில்லை காலனவன் கண்ணுக்கு. வேரறுத்துச் சென்று விட்டான். விழுதுகள் நாம் தவிக்கின்றோம். இருந்தும் நாம் அமைதிகொள்வோம். காரணம் நீ முதுமையிலே தவிக்காமல் எம்பெருமானிடம் சரணடைந்து உன் உடன் பிறப்புக்களுடன் ஒன்றிணைந்து இன்புற்று மோட்சம் அடைய பிராத்திக்கிறோம். மரணம் உங்களுக்கு நிரந்தரமல்ல மண்ணில் இடைக்கால விடுதலையே

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பெறாமக்கள், மருமக்கள் சார்பில்
சாந்தகுமார், சொர்ணலிங்கம்

## நினைவில் நிற்க

- அருள் நிறைந்த உள்ளம் ஆண்டவன் வாழும் இல்லம்
- உண்மை பேசும் மனத்தான் என்றும் உயர்ந்தவனாக இருப்பான்
- முயன்று தோற்பது கௌரவம் முயலாமல் இருப்பது கேவலம்.
- தாயின் பாசத்துக்கு விமோசனமில்லை தந்தையின் பாசத்துக்கு எல்லை இல்லை.

- மகாகவி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சில் நிறைந்ததிருக்கும் குஞ்சியம்மா !

குஞ்சியம்மா என்று
ஓர்குடிலாய் வாழ்ந்தோமே!
ஆசையப்பு வந்தால்
அருகணைந்து நிற்போமே!

அம்மா என்றே நாம் அழைப்போம்
அன்பான பாசத்தில் அடிபணிந்தோம்!
இம்மாநிலத்தில் உங்கள் நிழல்
எங்களை விட்டுப் பிரியாது தாயே!

வாழ்நாளில் எங்களை நேசித்ததுபோல்
வானிருந்தும் எங்களை நேசிப்பாயாக!

ஓம் சாந்தி!

பெறாமக்கள், மருமக்கள் சார்பில்
நா.பத்மநாதன்

**வாழ்வில் வெற்றி பெறக் கைக்கொள்ள வேண்டிய நலம் தரும் நவமணிகள்**

1. பிடித்தாலும் பிடிக்காது விட்டாலும் புன்னகை உதிர்க்கத் தவறாதீர்கள்
2. தகுதி இருந்தாலும் இல்லாது விட்டாலும் பாராட்டுதலைத் தவிர்க்காதீர்கள்
3. உண்மையானாலம், பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளியிடாதீர்கள்.
4. முடிந்தாலும் முடியாவிட்டாலும் உதவமாட்டேன் என்ற கூறாதீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் நினைவில் எங்கள் எண்ணங்கள் !

கள்ளமில்லாப் புன்சிரிப்பும்
களங்கமில்லாப் பேச்சும்
அன்பினிக்கப் பேசும் நீங்கள்
அரவணைக்கும் தென்றலல்லோ.

எம்சிறு வயதில் காலை எழுந்தவுடன்
முகம் கழுவி உங்களிடம் பால் Tea குடிக்க
ஓடிவரும் எங்களுக்கு கப் நிறைய பால் தந்து
அன்பொழுகக் கதைகள் கூறும் அம்மம்மா நீங்களெங்கே.

பள்ளி சென்று திரும்பியதும் நீங்கள் சமைத்திருக்கும்
சுவையான உணவுதனை உண்பதற்க்கு – எம்
அம்மாவிற்க்கு தெரியாமல் உங்களிடம் ஓடிவரும் போதெல்லாம்
உட்கார வைத்து ஊட்டிய உணவின் சுவை
இன்னும் எங்கள் நாக்கில் இனிக்குதம்மா

நாங்கள் குழப்படிகள் செய்து எம் அம்மா அடிக்க
வரும் போதெல்லாம் உங்கள் பின்னால் ஒளிந்து கொள்ள
அம்மாவை விரட்டி அடைக்கலம் கொடுத்து எமக்கு
புன்முறுவலோடு புத்திமதி கூறுவீர்கள்

சிறுவனாக இருந்த போது கடைக்குப் போகும் போதெல்லாம்
இனிப்புக்கு காசு தந்து அனுப்பி வைக்கும் உங்கள் பாசம்தான் என்ன
இப்படி எத்தனையோ நினைவுகள் எங்கள் மனதை வாட்டுதம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மம்மா என்றழைக்க இறுதியாக இருந்த உறவு நீங்கள்
உங்களையும் காலன் விரைவாக அழைத்து விட்டான்
அன்றல்ல இன்றல்ல என்றென்றும் எம் நெஞ்சில் உறைவீர்கள்
அம்மம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திப்போம்

இறைவனை..........

கணேசமூர்த்தி புவனேஸ்வரி
பிள்ளைகள்

- உடலை விற்று வாழும் ஒருத்தியை ஊரே கல்லால் அடித்துக் கொல்ல முயன்றது அப்போது இயேசு சொன்னார், அடியுங்கள் ஆனால் இதுவரை உடலாலும் மனதாலும் ஒரு பாவமும் செய்யாதவன் எவனோ அவன் கல்லால் எரியட்டும்.

- மனிதர்களின் சகல துன்பங்களுக்கும் காரணமே தன்னைப் பிறரோடு ஒப்பிட்டு பார்த்துக் கொள்வது தான்.
  வாழ்வை வளமாக வைத்துக் கொள்ள செல்வம் ஒரு இடைக்கால கருவியே ஒழிய இறுதி இலட்சிய அல்ல.

- பிறர் மதிப்பில் தான் பெரிதாக் தெரிய வேண்டும் என்ற கவலை எவனுக்கு இல்லையோ அவனே ஞானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசத்தின் உறைவிடம் பறந்தது எங்கே?

கண்ணுக்குள் நிறைந்தவரே ......!
காவியமாய் எம்முள் கலந்தவரே .....!
உம் நினைவுக்குள் எமைப்பதித்தவரே...!
தவிக்கவிட்டு சென்றீர்களே குஞ்சிஅம்மா...!!!

யாரிடம் இதைச்சொல்வோம்
நாம் பிரிந்து பல நாட்கள் சென்றாலும்
மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே..
எமைத்தேட விட்டுச்சென்றாயே அம்மா...!!!

எம்விரல்கள் தொடும் தூரம்
நீங்கள் இல்லை என்றாலும்
நாம் தொடுவோம் உம்மை
எம் இனிய நினைவுகளால் அம்மா...!!!

ஆயிரம் உறவுகள் அணைத்திட இருந்தாலும்
அன்னையே உன்போன்று அன்பு செய்ய
யாரும் இல்லையே என வாடுகிறோம்
பேரப்பிள்ளைகள் நாங்கள் உமை எண்ணி அம்மா...!!!

உம்மை எண்ணிவாடும்
பேரப்பிள்ளைகள் சார்பில்
வாசுகி பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளம்புலம் திருமுருகன்
## அறங்காவற் சபையின் அஞ்சலி!

பள்ளம்புலம் திருமுருகன் ஆலயத்தே
கூட்டுப் பிரார்த்தனையின் போது
உங்கள்
பிள்ளைகளின் குரல் முருகனைப்
போற்றிய நாட்கள் நினைவுக்கு வருகின்றன.!

கோவில் வளர்ச்சியிலும், பணியிலும்
திருவிழா நாட்களிலும் உங்களின்
பண்பு, உபயங்கள் என
பரிமளிக்கக் கண்டது எமது
ஆலயம் அன்றோ!

முருகனின் அருள்பெற்ற
முத்தாச்சி என்னும் அன்பு மாதே
எல்லாம் வல்ல இறைவன் தாளடியில்
இன்புற்று வாழ்வாயாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கண்ணீர் அஞ்சலிகளுடன்,
திருமுருகன் அறங்காவற் சபை
பள்ளம்புலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவில் இருந்து.......

முத்தாச்சி அக்கா!

முழுமதியின் சிரிப்பழகே!

என் ஆச்சியோடு இணைந்த ஊரழகே!

வாழ்வோடும் உறவோடும்
வாய்த்த பெருந்தாயே!

வழுக்கைப் புலம் வைரவரின்
பொங்கல் அன்று உங்களின்
பூக்கும் முகம் என்று வரும்!

வாழ்வோடும் உறவோடும்
வாழ்ந்த உங்கள்
நினைவுளால் வாடுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வேலப்பா இராசலிங்கம் (சிவம்)
கனடா!

நண்பனை கஷ்ட காலத்தில் தெரிந்து கொள்ளலாம் வீரனை போர்க்களத்தில் தெரிந்து கொள்ளலாம் நேர்மை யானவனை கடன் கொடுத்துத் தெரிந்து கொள்ளலாம். உறவினரை துன்பகாலத்தில் தெரிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய அஞ்சலி....!

அன்பின், பண்பின், பாசத்தின்,
கடமையின், கண்ணியத்தின் கருணையின்
பிறப்பிடம்
கடவுளின் நம்பிக்கையின் பிறப்பிடம்
இவ் அனைத்தையும் உங்களிடம் கண்டோம்.
அரிது அரிது மானிடப்பிறவி அரிது
அதுபோல் உங்களைப் போன்று
நல்லவரைக்காண்பது அரிது.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்த்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

என்றும் நினைவுடன்
நா. பத்மநாதன், (பெறாமகன்)
குடும்பம், வட்டக்கச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரார் வருந்துதல்!

ஊற்றாகி நின்று உயிராகிப் பூத்து
ஊராராய் நின்றனை அம்மா!
வேற்றாகி நிற்க விளையாத பண்பு
வித்தாகக் கொண்டதும் கண்டோம்
காற்றாகும் வாழ்வு கவர்ந்தாட நீங்கள்
கந்தனடி யுற்றனை கண்டோம்!போற்றாடும் பள்ளம்
புலத்தோடும் நின்ற
பெருந்தாயே முத்தாச்சி அம்மா!

### சுவாமி விவேகானந்தரின்
## சிந்தனைத் துளிகள்

01. எவன் ஒருவனுக்கு தன்னிடத்தில் நம்பிக்கையில்லையோ அவனே நாத்திகன்!

02. ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே அப்படி நினைப்பது சமயத்திற்கு மிகப் பெரிய முரண்பட்ட கருத்தாகும்.

03. நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆகிவிடுவாய்!

04. சுதந்திரமானவனாக இரு எவரிடத்திலும் எதையும் எதிர்பார்க்காதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம்நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்து
திருந்திய முதல்ஐந் தெழுத்துத் தெளிவாய்
பொருந்தவே எந்தன் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயத் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைத்தான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனை காபலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தித்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கி எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியின்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே
(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யா தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே.
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவ ன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னில்லாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என்ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

சிவபுராணம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லிங்காஸ்டகம்



ப்ரஹ் மமுராரி ஸீராச்சித லிங்கம்
நிர்மலபாஷித ஸோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாஸக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவ - முனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹ ம் கருணாகர லிங்கம்
ராவணதர்ப்ப விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸர்வஸீ கந்தி ஸீலேபித லிங்கம்
புத்தி - விபர்த்தன காரண லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸித்த ஸீராஸீரவந்தித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

கனகமஹா மணி பூஷத – லிங்கம்
பணிபதி – வேஷ்டித – விநாஸன லிங்கம்
தக்ஷஸீயக்ஞ – விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜஹார ஸீஸோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்
அஷ டதளோபரி வேஷ் டித லிங்கம்
ஸர்வஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸீரகுரு ஸீரவர பூஜித லிங்கம்
ஸீரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸம்பூர்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு



விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எற்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமாக தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரணைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகைபாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காரும்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது நாள்வரையில் இசைவொடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

கௌரி காப்பு முற்றிற்று

அள்ளித் தூக்கி அணைத்து வளர்த்தவன்
ஆவதற்கு வழிபல காட்டித் தன்
பிள்ளைப் பேச்சைக் கடிந்து வந்தவன்
பெற்றெடுத்தவன் மேனியின் மீதிலே
கொள்ளியிட்டுக் குனிந்து திரும்பினான்
கொழுந்து விட்டு எரிகின்றது! பேரொளி
வெள்ளமாய் ஓர் பகல் தொடராது கொல்?
மேற்கிலே ஒரு மாலை மடிந்தது.

– மகாகவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிட்டையுங் கைகூடும், நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந்தனை அமரரிடர் தீர சமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசகன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயம்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்த மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க்
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தால் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனையடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் செல்லப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
அடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரடஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடனாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

(கந்தசஷ்டி கவசம் முற்றிற்று)

------

## பட்டினத்தார் பாடல்
## தாயாருக்கு கடமை செய்த போது பாடியது

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் – செய்இரு
கைப்புறத்தில் ஏந்தி கனமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம்கிடந்து முந்நூறுநாள் சுமந்தே
அந்தி பகலாய்ச்சிவனை ஆதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மெலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்
சிறகிட்டக் காப்பாற்றிச் சிராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொந்து சுமந்துபெற்று நோவால் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே – அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும்
தாய்தனக்கோ மெய்யிலே தீமூட்டு வேன்!

அரிசியோ நான்இடுவேன்? ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உரசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?

அள்ளிஇடுவது அரிசியோ! தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்? – மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு.

முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கையிலே
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே!!


வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ – காகக்
குருவி பறவாமல் கோதாட்டி எனைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தக! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ – சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இதயதெய்வம் அணைந்தவேளை மரணச் சடங்கில் நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும். தொலைபேசி மூலமும் மற்றும் பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும். மலர் வளையம் சாத்தியோருக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும். எமது உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக. அத்துடன் எமது அழைப்பை ஏற்று அந்தியேட்டி கிரியைகளிலும், சபீண்டிகரண கிரியைகளிலும் கலந்து கொண்டோருக்கும். இம்மலரினை அழகுற வடிவமைத்து தந்த விகடன் அச்சகத்தாருக்கும் எமது நன்றிகளை பணிவுடன் கூறிக்கொள்கின்றோம்.

**நன்றி**




**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளம்புலம் திருமுருகன் தோத்திரங்கள்



தெள்ளத் தெளிந்தத் தெளிமுகம் கண்டு தினம்தொழுது
அள்ளப் பொலியும் அகத்தொடும் மாந்தி யருட்புனலின்
உள்ளக் கிடக்கை ஒளிரும் முருகத் தொடும்பாடல்
பள்ளம் புலத்தான் எனவே பரவப் படும்வினையே!

கானக் குறமகள் வள்ளிக் கனியைக் கவந்திழுத்துத்
தேனைப் பகர்மொழித் தெய்வத யானைத் தெழிலுடனே
வான மஞ்ஞைத் தழகாய் உலவும் மயூரவனார்
தானப் பள்ளம் புலத்துப் பதியின் தவக்கடலே!

ஊரும் பரவத் துயிரும் பரவத் தொளிர்வதனக்
கூரும் பரவக் குலவும் பதியிற் குமரனென
வேருஞ் செறிய விருட்சப் புலமாய் விதந்தருளிப்
பேருஞ் சிறக்கச் சுடர்தந் தனையெம் சிவப்புதலே!

குமரக்கோட்டன்

Printed By :
VIHADAN PRINTER
No - 541/2, Galle Road, Wellawatta, Colombo -06
Tel : 2504370, Fax : 2361329
E-mail : vihadanpr@yahoo.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org